**மார்ச் – 02**

# TNPSC துளிகள்

- ❖ மூத்த பத்திரிக்கையாளர் இராகுல் மகாஜன் மாநிலங்களவை தொலைக்காட்சியின் புதிய தலைமை செய்தி ஆசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார். மாநிலங்களவை தொலைக்காட்சியானது மாநிலங்களவையால் நிர்வகிக்கப்படுகிறது.
  - o பிரசார் பார்தி குழுமத்தின் தலைவர் திரு.சூர்யப்பிரகாஷ் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட ஆய்வுக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் இராகுல் மஹாஜன் புதிய தலைமை செய்தி ஆசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- ❖ புதிய இந்தியாவை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு "புதிய இந்தியாவிற்கான ஓட்டம்" (Run for New India) மாரத்தானை குஜராத் மாநிலத்தின் சூரத் நகரில் பிரதமர் தொடங்கி வைத்தார்.
- ❖ HIV/AIDSஆல் பாதிக்கப்பட்ட 1.2மில்லியன் மக்கள் குறைந்தபட்சம் ஆண்டிற்கு ஒரு முறையாவது இலவசமாக பரிசோதனை செய்து கொள்வதற்கான திட்டத்தை அரசு தொடங்கியுள்ளது.
  - o இந்த சோதனை ரத்தத்தில் RNAவின் அளவை அளவிடுவதோடு, வைரஸ் பெருக்கத்தையும் கண்டறியும். வைரஸ் பெருக்கமானது எதிர் ரெட்ரோவைரஸ் சிகிச்சையின் தரத்தை கண்காணிப்பதற்கு உதவும்.

# தமிழ்நாடு செய்திகள்

## மானிய விலையிலான அம்மா இருசக்கர வாகனத் திட்டம்

- ❖ மறைந்த தமிழக முன்னாள் முதல்வரான செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்களின் 70-வது பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கான நிகழ்ச்சியின்போது , வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு மானிய விலையில் இருசக்கர வாகனம் வழங்கும் திட்டத்தை இந்தியப் பிரதமர் துவங்கி வைத்தார்.
- ❖ இத்திட்டத்தின் ஓர் பகுதியாக, ஒவ்வொரு பயனாளரும் இரு சக்கர வாகனத்தின் விலையில் 50 சதவீதத்தை மானியமாகப் பெறுவர் அல்லது ரூபாய் இருபத்து ஐந்தாயிரத்தை மானியமாகப் பெறுவர்.
- ❖ ஒவ்வொரு ஆண்டும், வேலைக்குச் செல்லும் சுமார் ஒரு லட்சம் மகளிர் இத்திட்டத்தின் வாயிலாக பயன்பெற உள்ளனர்.
- ❖ கடந்த சட்டசபைத் தேர்தலுக்கான பிரச்சாரத்தின் போது ஜெ. ஜெயலலிதா அவர்களால் இந்த மானிய விலையிலான "அம்மா இரு சக்கர வாகனத் திட்டம்" தேர்தல் அறிவிக்கையாக அறிவிக்கப்பட்டது.

# தேசியச் செய்திகள்

## 15வது பயோ ஆசியா 2018

- ❖ தெலுங்கானா அரசாங்கத்தின் வருடாந்திர நிகழ்ச்சியான பயோ ஆசியா (Bio Asia)

மாநாடு இந்தியாவின் உயிர் அறிவியல் முனையமான (Life Science hub of India) ஹைராபாத்தில் அண்மையில் நடைபெற்றது.

- 2018ஆம் ஆண்டிற்கான பயோ ஆசியா மாநாட்டின் கருத்துரு "சரியான நேரம், இப்பொழுதே" (Right Time; Right Now) என்பதாகும்.
- மருத்துவப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் (Pharmaceutical Export Promotion Council- Pharmexcil) மற்றும் ஆசிய பயோடெக் சங்கக் கூட்டமைப்பு (FABA – Federation of Asian Biotech Association), ஆகியவற்றுடன் இணைந்து தொழிற்சாலை மற்றும் வர்த்தகத் துறையானது இந்த 15வது பயோ ஆசியா மாநாட்டை ஒருங்கிணைத்துள்ளது.
- அயர்லாந்து, நெதர்லாந்து, தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகள் இந்த 15வது பயோ ஆசியா மாநாட்டின் சர்வதேச பங்களிப்பாளர்களாகும் (Partners).
- குஜராத், அஸ்ஸாம், இராஜஸ்தான் ஆகியவை இம்மாநாட்டிற்கான இந்தியாவின் மாநில பங்களிப்பாளர்களாகும் (Partners).
- உயிர் அறிவியலின் மதிப்புச் சங்கிலியில் தற்போது உள்ள வாய்ப்புகள், சுகாதார சேவை அளிப்பிற்கு (healthcare delivery) புதிய செயல்மாதிரிகளை கண்டுபிடிப்பதற்கான புத்தாக்க வழிகள், வேகமான மாற்றத்தைக் கையாளுவதற்கான உத்திகள் போன்றவற்றின் மீது பயோ ஆசியா 2018 மாநாடு நடத்தப்பட்டுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## 20 ஆவது காமன்வெல்த் கல்வி அமைச்சர்கள் மாநாடு

- அண்மையில் பிஜி (FIJI) நாட்டில் நடி (Nadi) எனும் இடத்தில் 20 ஆவது காமன்வெல்த் கல்வி அமைச்சர்கள் மாநாடு நடைபெற்றது.
- இந்த 20வது காமன்வெல்த் கல்வி அமைச்சர்கள் மாநாட்டின் கருத்துரு "நீடித்த தன்மை மற்றும் மீள்திறன் ஆகியவற்றை கல்வியால் வழங்க முடியுமா? (Sustainability and Resilience: Can Education Deliver?)
- 2030ஆம் ஆண்டுக்குள் எட்ட வேண்டி இலக்கிடப்பட்ட நீடித்த வளர்ச்சி இலக்குகள் (Sustainable Development Goal – SDG) உலகளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின் நடத்தப்படும் முதல் காமன்வெல்த் கல்வி அமைச்சர்கள் மாநாடு இதுவேயாகும்.
- காமன்வெல்த் நாடுகளின் தலைவர்கள் சந்திப்பைத் தொடர்ந்து (Commonwealth heads of Government Meeting) காமன்வெல்த் செயலகத்தால் (Commonwealth Secretariat) ஒருங்கிணைக்கப்படும் காமன்வெல்த் நாடுகளுக்கான இரண்டாவது பெரிய மாநாடு இதுவாகும்.
- இந்த 20வது காமன்வெல்த் கல்வி அமைச்சகர்கள் மாநாட்டில் நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு கல்வி அத்தியாவசியமான, தவிர்க்க முடியாத ஒரு அம்சம் எனவும், கல்வி ஒவ்வொருடைய அடிப்படை மனித உரிமை (fundamental human right) எனவும் மறுஉறுதி செய்யப்பட்டது.
- காமன்வெல்த் கல்வி அமைச்சர்கள் மாநாட்டோடு சேர்த்து ஒருங்கிணைந்த கூட்டளிப்பாளர்கள் மன்றத்தின் சந்திப்பும் (Integrated Partners Forum – IPF) பிஜியில் நடைபெற்றது.
- அடுத்த 21வது காமன்வெல்த் கல்வி அமைச்சர்கள் மாநாட்டை 2021 ஆம் ஆண்டில்

கென்யா நடத்த உள்ளது

- 1959 ஆண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை காமன்வெல்த் கல்வி அமைச்சர்கள் மாநாடு நடத்தப்பட்டு வருகிறது.
- இதன் முதல் மாநாடு 1959-ல் இங்கிலாந்தின் ஆக்ஸ்போர்டில் நடத்தப்பட்டது.

## சவுதி அரேபியா – இராணுவம்

- சவுதி அரேபியா அரசு முதன் முறையாக இராணுவத்தில் பெண்கள் சேர அனுமதியளித்துள்ளது.
- பெண்கள் ரியாத், மெக்கா, அல்-காசிம் மற்றும் மெதினா ஆகிய மண்டலங்களில் படைவீரர்கள் பணிக்காக விண்ணப்பிக்கலாம்.
- பெண் விண்ணப்பத்தாரர்கள் 25-35 வயதுக்குட்பட்டவர்களாக இருக்க வேண்டும். உயர்நிலைக் கல்வி முடித்தவர்களாகவும், கட்டாய மருத்துவப் பரிசோதனையில் தேர்ச்சி பெற்றவர்களாகவும் இருக்க வேண்டும்.
- இவர்கள் போர்/சண்டையின் போது ஈடுபடுத்தப்பட மாட்டார்கள். அதேசமயம், பாதுகாப்புத் துறையில் இணைந்து செயல்பட அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படும்.
- சவுதி இளவரசர் முகம்மது பின் சல்மானால் தொடங்கி வைக்கப்பட்ட தொலைநோக்குத் திட்டம் 2030ன் கீழ் இந்த வாய்ப்பு பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## ஸ்பேஸ் எக்ஸ்

- கலிபோர்னியாவின் வான்டென்பெர்க் விமானப்படைத் தளத்தில் உள்ள 4E விண்வெளி ஏவுதள வளாகத்திலிருந்து ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் (Space x) டின்டின் A (Tintin A / மைக்ரோசாட் -2a) மற்றும் டின்டின் B (Tintin B / மைக்ரோசாட் 2b) எனும் இரு சோதனை செயற்கைக் கோள்களுடன் பாஸ் விண்வெளி திட்ட (Paz Mission) செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தியுள்ளது.
- பால்கான் 9 (Falcon 9) எனும் மறுசுழற்சிப் பயன்பாட்டு இராக்கெட் (Recycled) மூலம் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் (Space x) இந்தத் திட்டத்திற்கான செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவியுள்ளது.
- இவ்விரு செயற்கைக்கோள்களும் வெற்றிகரமாக சரியான இடத்தில் நிலை நிறுத்தப்பட்டால் இவை நட்சத்திரக் கூட்டிணைவு (Star Link) அமைப்பை ஏற்படுத்துவதற்கு வழி வகுக்கும்.
- உலகம் முழுவதும் மலிவான, அதிவேகமான இண்டர்நெட் இணைப்பு வசதியை உண்டாக்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட செயற்கைக்கோள்களின் திரளே (Satellite constellation) Star link ஆகும்.



- Star link அமைப்பானது கீழான புவிச் சுற்றுப்பாதை (Low Earth orbit-LEO) மற்றும் மிகவும் கீழான புவிச்சுற்றுப்பாதை (Very Low Earth orbit-VLEO) என இரு விண்வெளி அடுக்குகளில் சுமார் 12,000 சிறிய செயற்கைக்கோள்களைக் கொண்டுள்ளது.
- எல்லைக் கட்டுப்பாடு, புலனாய்வு வேலைகள், இராணுவ செயல்பாடுகள், சுற்றுச்சூழல் கண்காணிப்பு போன்ற பல்வேறு பயன்பாடுகளைக் கொண்ட ஸ்பானிய ரேடார் இமேஜிங் செயற்கைக் கோளைக் கொண்டது பாஸ் திட்டமாகும் (Paz mission).
- கீழான புவி சுற்றுப்பாதையில் உள்ள செயற்கைக்கோள் திரளானது உலகம் முழுவதும் அதிவேக பிராட்பேண்ட் சேவையை வழங்க வல்லது.
- மிகவும் கீழான புவிச்சுற்றுப் பாதையில் உள்ள செயற்கைக்கோள் திரளானது இணைய வேகத்தின் திறனை (capacity) அதிகரிக்க உதவும்.
- 2016 -ஆம் ஆண்டின் நீடித்த மேம்பாட்டிற்கான ஐ.நா. பிராட்பேண்ட் கமிஷன் அறிக்கைப்படி (UN Broadband Commission for Sustainable Development) உலகின் மொத்த மக்கள் தொகையில் 51 சதவீதத்தினர் இணையப் பயன்பாடில்லாது (Offline) உள்ளனர்.
- கீழான புவி சுற்றுப்பாதையில் உள்ள செயற்கைக்கோள்களானது ka,Ku,V போன்ற அதிர்வெண் பட்டைகளில் செயல்படுகின்றன.
- மிகவும் கீழான புவிச் சுற்றுப்பாதையில் உள்ள செயற்கைக்கோள்கள் V அதிர்வெண் பட்டைகளில் (V band) செயல்படுகின்றன.
- கீழான புவிச் சுற்றுப்பாதையானது பூமிக்கு மேற்புறத்தில் 1110 முதல் 1325 கிலோ மீட்டர் உயரத்தில் உள்ள செயற்கைக்கோள் சுற்று வட்டப் பாதையாகும்.
- மிகவும் கீழான புவிச் சுற்று பாதையானது பூமிக்கு மேற்புறத்தில் 335 – 346 கிலோ மீட்டர் உயரத்தில் உள்ள செயற்கைக்கோள் சுற்றுவட்டப்பாதை ஆகும்.

# விளையாட்டுச் செய்திகள்

## 69வது ஸ்டிரேன்ட்ஜா நினைவு குத்துச் சண்டை போட்டி

- பல்கேரியாவின் சோபியா நகரில் நடைபெற்ற ஸ்டிரேன்ட்ஜா நினைவு குத்துச் சண்டைப் போட்டியின் 75 கிலோ எடைப்பிரிவில் விகாஸ் கிருஷ்ணன், இதற்கு முன்னர் வெண்கலப் பதக்கம் வென்ற உலக சாம்பியன் டிராய் ஐஸ்லேவை வென்று சாதனை படைத்துள்ளார்.
- கடந்த ஆண்டு (ஏப்ரல் – மே 2017ல்) நடைபெற்ற ஆசிய சாம்பியன்ஷிப் வெண்கலப் பதக்கத்திற்கான போட்டியிலிருந்து விகாஸ் கிருஷ்ணன் பெற்ற முதல் பதக்கம் இதுவேயாகும்.
- சிறந்த குத்துச்சண்டை வீரருக்கானப் பட்டத்தையும் விகாஸ் கிருஷ்ணன் வென்றுள்ளார்.
- அமித் பங்கால் (49 கிலோ) தங்கப்பதக்கத்தை வென்றுள்ளார்.
- இந்தியா மொத்தம் 2 தங்கம், 3 வெள்ளி மற்றும் 6 வெண்கல பதக்கங்களைச் சேர்த்து 11 பதங்கங்களை (5 ஆண்கள், 6 பெண்கள்) வென்றுள்ளது.
- மேலும் இப்போட்டியில் இந்தியாவின் மேரி கோம், சீமா பூனியா ஆகியோர் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

# முக்கிய தினங்கள்

## அரிதான நோய்கள் தினம் – பிப்ரவரி 28

- 11 ஆவது அரிதான நோய்கள் தினம் EYRORDIS ஆல் பிப்ரவரி 28 அன்று ஒருங்கிணைக்கப்பட்டது. (EURORDIS – European Organization for Rare Disease).
- அரிதான நோய்கள் தொடர்பான விழிப்புணர்வை பொதுமக்கள் மற்றும் முடிவெடுப்பாளர்களுக்கு (Decision Makers) ஏற்படுத்தும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி கடைசி நாளில் கொண்டாடப்படுகிறது.
- இந்த அரிதான நோய்கள் தினம் முதன் முதலில் EURORDIS மற்றும் இதன் தேசியக் கூட்டணிக் குழுவால் 2008 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. முதல் அரிதான நோய்கள் தினம் பிப்ரவரி 28, 2008 அன்று கொண்டாடப்பட்டது.

- - - - - - - - - - - - - - -